(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(8).]

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, நவெம்பர் 14, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2011 நவெம்பர் 21, திங்கட்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நாடு, நகரத் திட்டமிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் உட்பிரிவு (2), 17 ஆம் பிரிவின் உட்பிரிவு (2) பந்தி (அ), மற்றும் 18 ஆம் பிரிவின் உட்பிரிவின் (2) பந்தி (அ) இன் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே மாதம் 10 ஆம் திகதிய 1705/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

*

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 யூலை மாதம் 20 ஆம் திகதிய 1715/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2011 திசெம்பர் 01, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0678/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்படுகின்ற காணியை அரசாங்கம் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு முறையில் வெளித் தரப்புக்கு ஒப்படைத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறு யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அக்காணி ஒப்படைக்கப்பட்டுள்ள பணத்தொகை, ஒப்படைக்கப்படுள்ள வருடம் மற்றும் காணியின் பரப்பளவு யாதென்பதையும்;

(iv) இந்த விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதன் உரிமை ஒப்படைக்கப்படும் தரப்பினர் யாவர் என்பதையும்;

(v) ஒப்படைக்கப்படும் கால எல்லை மற்றும் பணத் தொகையையும்;

(vi) இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வருடாந்த வருமானத்தையும்

அவர் குறிப்படுவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்குச் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இப்பணத் தொகை அரசாங்கத்தினால் அல்லது அரச நிறுவனமொன்றினால் அல்லது இலங்கைக் கிரிக்கெட்டினால் அல்லது வேறு நிறுவனத்தினால் செலவிடப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில் ஒவ்வொரு தரப்பினராலும் செலவிடப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கும் அதன் கட்டிடக் கலைக்கும் ஆலோசனைகளை வழங்குவது யாவர் என்பதையும்;

(ii) விளையாட்டு மைதானம் , விளையாட்டு அரங்கு, இராப்பகல் மின் குமிழ்கள் என்பவற்றுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை மற்றும் வருடாந்த பராமரிப்புக்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1336/ '11

கௌரவ புத்திக்க பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் பெத்தும்கம கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் 3 வருடகாலமாக செயலிழந்துள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நீர் வழங்கல் திட்டத்துக்குரிய பௌதீக வளங்கள் அனைத்தும் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணிப்பதற்கு நிதி முதலீடு செய்த நிறுவனங்கள் யாவை;

(ii) இதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்துக்குரிய வளங்களை புனரமைத்து மீண்டும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) இந்த நீர் வழங்கல் திட்டத்தை வழமை நிலைக்கு கொண்டுவந்து மீண்டும் பிரதேச மக்களின் குடி நீர் தேவையை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா

(iii) அவ்வாறெனின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1479/ '11

கௌரவ அஜித் குமார,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவை;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1525/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு தெற்குத் துறைமுகம் எப்போது பூர்த்தி செய்யப்படவுள்ளது என்பதையும்;

(ii) அது பூர்த்தியடைவதற்கு முடியுறுத்தப்படவுள்ள கட்டங்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு தெற்கு துறைமுகத்தின் அலைதாங்கியின் நிர்மாணம் எப்போது பூர்த்தி செய்யப்படவுள்ளது என்பதையும்;

(ii) அலைதாங்கி நிர்மாணத்திற்கான செலவினத்தையும்;

(iii) அலைதாங்கி நிர்மாணத்திற்கான செலவினைச் செலுத்துபவரையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்படி துறைமுகத்தின் இறங்கு துறைகளின் நிர்மாணம் எப்போது பூர்த்திசெய்யப்படவுள்ளது என்பதையும்;

(ii) அந்த இறங்கு துறைமுகங்களுக்கான நிதியிடல் மற்றும் நிர்மாணம் ஆகியவற்றிற்கென தனியார் கம்பனிகள் முன்வந்துள்ளனவா என்பதையும்;

(iii) அப்படியாயின், கம்பனிகளின் பெயர்களையும் அவற்றிற்கு வழங்கப்பட்ட சலுகைகளுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1612/ '11

கௌரவ ஈ.சரவணபவன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாநகர சபையின் நகரபிதா, சபையின் அனுமதியின்றி தான்தோன்றித்தனமான முடிவுகளை எடுத்து, யாழ்ப்பாண நகரின் சதுப்பு நிலப் பகுதியொன்றில், நான்கு மாடிகளைக் கொண்ட வர்த்தகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு தனியார் வர்த்தகரொருவருக்கு அனுமதி வழங்கியுள்ளார் என்பதையும்;

(ii) யாழ்ப்பாணத்தின் முன்னாள் நகரபிதாவான காலஞ்சென்ற திரு. ரவிராஜ், மேற்படி சதுப்பு நிலப் பகுதியில் மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக முன்வைத்த பிரேரணையை, மண் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கையின் விதப்புரைகள் காரணமாக செயற்படுத்தவில்லை என்பதையும்;

(iii) எந்தவிதமான மண் பரிசோதனையும் மேற்கொள்ளப்படாது, மேற்படி சதுப்பு நிலத்தில், தற்போது நான்கு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது என்பதையும்;

(iv) மேற்படி நிர்மாணிப்பு, பிற்காலத்தில் உயிர் மற்றும் சொத்திழப்புகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் முன்னதாக, இதை நிர்மாணிப்பவர் சில வர்த்தக நிலையங்களை விற்பனை செய்துள்ளார் என்பதையும்;

(ii) இதில், ரூபா 19,000,000 க்கு விற்பனை செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு ரூபா 11,000,000க்கு மாத்திரம் உறுதிகளை எழுதி, முற்பணமாக ரூ. 50,000 வீதம் பெறப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இதன்மூலம், மாநகர சபைக்கு வருமான இழப்பும் வருமான வரி மோசடியும் நடைபெற்றுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்கூறப்பட்ட நிலைமையைத் தடுப்பதற்காக ஆரம்பகட்ட விசாரணையை நடத்தி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1682/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் விளையாட்டுத்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் விளையாட்டுத்துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1704/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மில்கோ நிறுவனத்தினால் மாதாந்தம் கொள்வனவு செய்யப்படுகின்ற பாலின் அளவு வருடவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மில்கோ நிறுவனம் சேகரிக்கும் பாலிலிருந்து பால்மா உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பாலின் சதவீதம் 2008ஆம் ஆண்டு தொடக்கம் வருடவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் ஹைலண்ட் இலச்சினையின் கீழ் சந்தைக்கு வழங்கப்படுகிறதா என்பதையும்;

(iv) இன்றேல், அவ்வாறு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(v) அவ்வாறாயின், இறக்குமதி செய்யப்படும் பால் ஹைலண்ட் இலச்சினையின் கீழ் வழங்கப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 02, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0959/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கையில் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற கெசினோ விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவை கொண்டு நடாத்தப்படும் இடங்கள் யாவை என்பதையும்,

(iii) அவற்றின் உரிமையாளர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(iv) அவ்வாறான ஒவ்வொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கெசினோ விடுதிகளின் மூலம் அரசிற்குக் கிடைத்துள்ள வரி வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) கெசினோ விடுதியொன்றை ஆரம்பிப்பதற்கு உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வழிமுறை யாது என்பதையும்,

(iii) உரிமம் வழங்கும் போது இறுதி அனுமதியளிக்கும் நபர் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் கெசினோ விடுதிகளுக்கான புதிய உரிமப்பத்திரங் களுக்கென விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) இவர்களில் உரிமப்பத்திரம் வழங்கப்படவுள்ளோரின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவ்வாறு உரிமப் பத்திரங்களைப் பெற்றவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1351/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படுகின்ற நிதியை பயன்படுத்தி தனியார் வங்கிகளின் பங்குகளை கொள்வனவு செய்கின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் அமுல்படுத்தி வருகின்றதென்பதையும்;

(ii) இவ்வாறு செயற்படுதல் வங்கித்துறையின் ஒழுக்கநெறிகளுக்கும் நல்லாட்சிக்கும் முரணான சட்ட விரோதச் செயலாகும் என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் மேற்படி செயற்பாட்டின் காரணமாக உள்நாட்டு வங்கித் துறை நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஏற்கனவே பல தனியார் வங்கிகளின் பணிப்பாளர் சபைக்கு அரசாங்கத்துடன் தொடர்புடைய ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், இந்த ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி, கல்வித் தகைமைகள் மற்றும் வேறு தகைமைகள் யாவையென்பதை அவர் தனித் தனியாக குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1480/ '11

கௌரவ அஜித் குமார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1526/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சாரக் கம்பனியின் (LECO) செலுத்தப்பட்ட மூலதனம்;

(ii) பங்குதாரர்கள்;

(iii) அதன் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் ;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இலங்கை மின்சாரக் கம்பனி தொடர்பாக,

(i) கடந்த ஐந்து வருடங்களுக்கான இலாபத்தை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) இந்த நிதியாண்டில் இற்றை வரையிலான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள மறுசீராக்கல்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை மின்சாரக் கம்பனியின் சேவையைப் பெறும் நுகர்வோர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) மேலேயுள்ளள எண்ணிக்கையினை இலங்கை மின்சார சபையின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையின் சதவீதமாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1679/ '11

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் தபால் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் தபால் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1683/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் சிவில் விமான சேவைகள் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் சிவில் விமான சேவைகள் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1699/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதவாச்சி புகையிரத நிலையத்திலிருந்து மடு வரையிலான புகையிரதப் பாதையின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) மதவாச்சியிலிருந்து மடு வரையிலான புகையிரதப் பாதையை புனரமைக்கும் கம்பனி யாதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனியை தெரிவுசெய்யும்போது முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) மேற்படி பாதையை புனரமைப்பதற்கு செலவாகும் மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(v) இப்பணத்தொகையை பெற்றுக்கொள்ளும் முறைமை யாதென்பதையும்;

(v) கடன் மூலமாக மேற்படி பணத்தொகையை பெற்றுக்கொள்வதாயின் ஏற்புடைய வட்டி வீதம் மற்றும் இக்கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2011 திசெம்பர் 03, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1316/11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு ஹில்டன் ஹோட்டல் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இதை அரசாங்கம் சுவீகரித்தமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கம் இந்த ஹோட்டலை மீண்டும் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) இதனை கொள்வனவு செய்கின்ற நபர் அல்லது நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கொடுக்கல்வாங்கல் இடம்பெறுவது குத்தகை அடிப்படையிலா அல்லது நிரந்தர அடிப்படையிலா என்பதையும்;

(v) மேற்படி கொள்வனவு எவ்வளவு காலத்திற்கு நடைமுறையிலிருக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1337/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் கலேவெல, தம்புள்ள மற்றும் நாஉல பிரதேச செயலாளர் பிரிவுகள் மூன்றிற்கும் எல்லைகளாக வெவமெடில்ல நீர்த்தேக்கம் அமைந்துள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் நீர்த்தேக்கத்தில் மூழ்கிய காணிகளின் உரிமையாளர்களுக்கு இன்றுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நீர்த்தேக்கத்தில் மூழ்கிய காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி இழப்பீடு வழங்குவதிலுள்ள தடைகள் யாவை என்பதையும்;

(iii) குறித்த தடைகளை நீக்கி துரிதகதியில் இழப்பீடு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி இழப்பீடுகளை வழங்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1481/ '11

கௌரவ அஜித் குமார,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெகுசன ஊடக, தகவல் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1527/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய வருடாந்த தேயிலை உற்பத்தியையும்;

(ii) இலங்கையில் தற்போதைய தேயிலைக் கொழுந்தின் வருடாந்த விளைச்சலையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) உலகளாவிய தேயிலை உற்பத்தியையும்;

(ii) உலகளாவிய தேயிலைச் சந்தையில் இலங்கையின் சந்தைப் பங்களிப்பையும்;

(iii) தேயிலை உற்பத்தி செய்யும் ஏனைய நாடுகளின் பெயர்களையும்;

(iv) அந்நாடுகளில் ஓர் ஹெக்டேயருக்கான விளைச்சல் மற்றும் வருடாந்த மொத்த தேயிலை உற்பத்தி ஆகியவற்றை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) உயர் விளைச்சலை இலக்காகக் கொண்டு உள்ளூர் தேயிலை பயிர்ச்செய்கையை மீள்திட்டமிட நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையில் 2017, 2022, 2027 மற்றும் 2030ஆம் ஆண்டுகளில் முறையே உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தேயிலையின் அளவையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1684/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் காணித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் காணித்துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1690/ '11

கௌரவ (வண) எல்லாவல மேதானந்த தேரர்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் சுற்றாடலைப் பேணுவதற்காக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) சுற்றாடலைப் பேண எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1700/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மடு புகையிரத நிலையத்திலிருந்து தலைமன்னார் வரையிலான புகையிரதப் பாதையின் தூரம் எவ்வளவென்பதையும்;

(ii) மடுவிலிருந்து தலைமன்னார் வரையிலான புகையிரதப் பாதையை புனரமைக்கும் கம்பனி யாதென்பதையும்;

(iii) அக்கம்பனியை தெரிவு செய்யும் போது முறைசார்ந்த கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இப்பாதையை நிர்மாணிப்பதற்காக செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இப்பணத்தொகை பெற்றுக் கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(vi) கடன் தொகை மூலம் மேற்படி பணத்தொகை பெறப்படுமெனில் இதற்கான வட்டி வீதம் மற்றும் மேற்படி கடன் தொகை மீளச் செலுத்தப்படும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2011 திசெம்பர் 05, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1338/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி மாவட்டத்தில் எல்பிட்டி – பிட்டிகல பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தூவத்த பாலத்தின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு இரண்டு மாதங்கள் கழியும் முன்னரே பாரதூரமான விதத்தில் அமிழ்கின்ற ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்தப் பாலத்தின் நிர்மாணத்திற்காக,

(i) மதிப்பிடப்பட்ட பணத் தொகை யாது என்பதையும்;

(ii) பணத்தை முதலீடுசெய்த நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iii) வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், வழங்கிய நாடு மற்றும் வழங்கப்பட்ட பணத் தொகை யாது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(ii) குறித்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1490/ '11

கௌரவ அஜித் குமார,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1528/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய வருடாந்த இயற்கை இறப்பர் உற்பத்தியின் அளவையும்;

(ii) தற்போது இலங்கையில் இறப்பர் பெருந்தோட்டங்களின் வருடாந்த இறப்பர் பால் விளைச்சல் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இயற்கை இறப்பரின் உலகளாவிய உற்பத்தி அளவையும்;

(ii) உலகளாவிய இயற்கை இறப்பர் சந்தையில் இலங்கையின் சந்தைப் பங்கு எவ்வளவு என்பதனையும்;

(iii) இயற்கை இறப்பரை உற்பத்தி செய்யும் ஏனைய நாடுகளின் பெயர்களையும்;

(iv) அந்நாடுகளில் ஹெக்ரெயர் ஒன்றுக்கான விளைச்சல் மற்றும் வருடாந்த உற்பத்தியை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) உயர் விளைச்சலை இலக்காக வைத்து உள்ளூர் இறப்பர் பயிர்ச்செய்கையை மீளமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) முறையே 2017, 2022, 2027 மற்றும் 2030ஆம் ஆண்டுகளில் இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் இயற்கை இறப்பரின் அளவையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1537/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலுமுள்ள கமநல ஓய்வூதியம் பெறும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய வயதெல்லை யாது;

(iii) கமநல ஓய்வூதியத்துக்கு பங்களிப்புச் செய்துவிட்டு குறிப்பிட்ட வயதெல்லையை கடக்கும் வரை காத்திருப்போரின் எண்ணிக்கை யாது;

(iv) கமநல ஓய்வூதியத்துக்கு பங்களிப்புச் செய்துவிட்டு குறிப்பிட்ட வயதெல்லையைத் தாண்டிய பின்பு ஓய்வூதியம் பெறாதிருப்போரின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கமநல ஓய்வூதியத்திட்டத்தை நிறுத்திவிட்டு வேறொரு ஓய்வூதியத்திட்டத்தை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றதா;

(ii) வேறொரு திட்டம் அமைக்கப்படுமாயின் இதுவரை அங்கத்துவம் பெற்றுள்ள அங்கத்தவர்களின் ஓய்வூதியம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1680/ '11

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் தொடர்பாக நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1681/ '11

கௌரவ (வண) எல்லாவல மேதானந்த தேரர்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் அரச சேவையின் தரத்தை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளினூடாக அரச ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் கிடைத்துள்ள சலுகைகள் யாவை என்பதையும்;

(iii) அரச ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கடந்த 5 ஆண்டுகளில் செயற்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் அரச சேவையை வினைத்திறன்மிக்க சேவையாக மாற்றும் பொருட்டு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அதனூடாக அரச ஊழியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1685/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் கடற்றொழில் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை;

(iii) எதிர்காலத்தில் கடற்றொழில் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 06, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1339/ '11

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் தமன பிரதேச செயலாளர் பிரிவில் இளைஞர் யுவதிகளுக்கென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடாத்தப்பட்ட பிரதேச இளைஞர் வள மைய நிலையம் பயன்படுத்தப்படாது பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக தலைவர்கள் உருவாவதற்கும் அத்துடன் தொழில்சார் மற்றும் விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும் இளைஞர் யுவதிகளுக்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த வள மைய நிலையத்தைக் கைவிடுவதற்குக் காரணமாயமைந்த தடைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தடைகளை உடனடியாக அகற்றி இந்த வள மைய நிலையத்தை பிரதேசத்திலுள்ள இளைஞர் யுவதிகளின் பயன்பாட்டின் பொருட்டு மக்கள் உரிமைக்கு மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1531/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 முதல் இற்றை வரை,

(i) வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு சென்ற நபர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் மேற்கொண்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையையும்,

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சென்ற நபர்களுக்காக வழங்கப்பட்ட காப்புறுதிக் காப்பீட்டின் மூலம் அரசாங்கம் திரட்டிய வருமானத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்லும் தொழிலாளர்களுக்கு காப்புறுதிக் காப்பீடுகளை வழங்குவதற்கு தகைமையுடைய கம்பனிகளையும்,

(ii) மேற்படி கம்பனிகள் முறையான கேள்விப்பத்திர நடைமுறைகளினூடாக தெரிவுசெய்யப்பட்டனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1541/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மகநெகும இயந்திர உபகரணங்கள் மற்றும் நிர்மாணக் கம்பனி மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி வீதிகளினதும் பாலங்களினதும் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வீதி மற்றும் பாலத்துக்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகள் மற்றும் பாலங்களில் மகநெகும நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் வேறு கம்பனிகளினால் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்கள் உள்ளனவா;

(ii) மேற்படி நிர்மாணங்களை மேற்கொண்ட வேறு நிறுவனங்களின் விபரங்கள் யாவை;

(iii) இவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1688/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1350/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலந்தோட்டை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின் வலவ்வேவத்த வீதியில் ஓலுவிலவில் அரிசி மா சார்ந்த தொழிற்சாலையொன்றை அமைக்கும் பொருட்டு அடிக்கல் நாட்டப்பட்டுள்ள போதிலும் மேற்படி கருத்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இக்கருத்திட்டம் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இத்தொழிற்சாலையை துரிதமாக ஆரம்பித்து பிரதேச மக்கள் மத்தியில் அரிசி மாவை பிரபல்யமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், இக்கட்டடத்தையும் காணியையும் வேறு அலுவலுக்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1532/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கொழும்பிலுள்ள சில காணிகளை நீரைத் தேக்குவதற்கான ஏரிகளை மாற்றுவதற்கு நடவடிக்கையில் இறங்கியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் நீரைத் தேக்கி வைக்கும் அவ்வாறான ஏரிகளின் அமைவிடங்களையும்;

(iii) ஏரியொன்றினைப் பெரிதாக்குவதற்கு ஆகும் செலவினையும்;

(iv) மேலே சொல்லப்பட்ட மாற்றத்திற்குப் பின்னர் தேக்கிவைக்கப்படக்கூடிய நீரின் மேலதிகக் கனவளவையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) கொழும்பிலுள்ள ஏரிகள் ஆழமாக்கப்பட்டு அவற்றிலுள்ள வண்டல்கள் அகற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எப்பொழுது செய்யப்பட்டது என்பதையும்;

(iii) ஆழமாக்குவதற்கும் வண்டல் அகற்றுவதற்கும் ஏற்பட்ட செலவினையும்

அவர் கூறுவாரா?

(இ) தரையிலிருந்து கடலுக்கு நீர் செல்வதற்காக வெள்ளவத்தை, இரத்மலானை மற்றும் கொழும்பு துறைமுகத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள மதகுகள் அகலமாக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1556/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மைக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது இடம்பெயர்ந்தோரின் நலனோம்புகைக்கென மக்கள் வங்கியினால் ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) இதன் கீழ் நலனோம்புகை வசதிகள் பெற்ற இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) இந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்ட நிதி அல்லது பொருளுதவிகளின் பெறுமதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட இந்நிதியுதவியை அவர்களுக்கு வழங்குவதற்காகப் பொறுப்பேற்ற நிறுவனம் அல்லது நபர்கள் யாவர்;

(ii) இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்நலனோம்புகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டதற்காக முன்வைக்கக்கூடிய சான்றுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1066/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அண்மைய சனத்தொகைக் கணிப்பீடு, புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை மையமாக் கொண்டு,

(i) நாட்டில் எத்தனை கிராமங்கள் உள்ளன என்பதையும்;

(ii) ஒரு கிராமத்தில் சராசரியாக எத்தனை குடும்பங்கள் வாழ்கின்றன என்பதையும்;

(iii) நாட்டில் எத்தனை கிராம சேவகர்கள் பிரிவுகள் மற்றும் கிராம சேவகர் பதவிகள் உள்ளன என்பதையும்;

(iv) நாட்டில் எத்தனை பிரதேச செயலாளர்கள் உள்ளனர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு மாகாணத்திலும், மாவட்டத்திலும், தேர்தல் தொகுதியிலும், பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம சேவகர் பிரிவுகளிலும் எத்தனை கிராமங்கள் உள்ளன என்பதை தனித்தனியாகவும்;

(ii) மாவட்ட அடிப்படையில் மொத்த சனத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அடுத்த உத்தியோகபூர்வ சனத்தொகை கணிப்பீடு எப்பொழுது நடைபெறும் என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1352/ '11

கௌரவ புத்திக பதிரண,— மின்வலு,சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி குறுவிட்ட மஹவத்தகந்த தொடக்கம் தெனீபிட்ட தேயிலை குடியிருப்பு வரை மின்சாரம் வழங்குவதற்காக மின்மாற்றி (Transformer) ஒன்று பொருத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ள போதிலும் தெனீபிட்ட தேயிலை குடியிருப்புப் பிரதேச மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இப்பிரதேச மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மின்சாரம் வழங்கப்படுமெனில் அத்திகதி யாதென்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1482/ '11

கௌரவ அஜித் குமார,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மரபுரிமைகள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1562/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்கு போட்டிப் பரீட்சைகளின்றி ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு ஆட்சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களை ஆட்சேர்க்கும்போது ஆராயப்படுகின்ற குறைந்தபட்ச தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளில் தோற்றி ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ள ஆயிரக்கணக்கானோர் தற்போதுகூட தொழில் வாய்ப்புகளின்றி உள்ளபோது போட்டிப்பரீட்சைகள் நடத்தப்படாது மேலே குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகளின் காரணமாக பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களுக்கு பெரும் அநீதி நேரிடுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளவர்களுக்கு தொழில் வழங்குவதற்கான நீதியானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1353/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தின் பிபிலை கல்வி வலயத்திற்குரிய, மெதகம கோட்டக்கல்வி அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரை இற்றுப்போய் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளதென்பதையும்;

(ii) இந்த நிலைமையானது அலுவலக ஊளியர்களின் உயிருக்கு ஆபத்தாகும் என்பதைப் போன்றே நிருவாக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளதென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த அலுவலகக் கட்டிடத்தை உடனடியாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) இதற்காக தற்போது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1533/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மக்கள் சபை (ஜனதா சபா) உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், உருவாக்கப்பட்டுள்ள மக்கள் சபைகளின் எண்ணிக்கையையும்;

(iii) இவற்றை உருவாக்குவதற்கான அடிப்படையினையும் நோக்கத்தினையும்;

(iv) மக்கள் சபைகளை நிர்வகிக்கும் அதிகார அமைப்புக்களையும்;

(v) மக்கள் சபையின் நோக்கெல்லையினையும்;

(vi) மக்கள் சபைகளை நடத்துவதற்கு ஏற்படும் செலவினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மக்கள் சபைகளில் உள்ளடங்கும் பிரதிநிதிகளையும்;

(ii) மக்கள் சபைகளின் உருவாக்கத்துடன் முடிவுறுத்தப்பட்ட ஏதாவது நிறுவனம் உண்டா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மூடப்பட்ட அந்த நிறுவனங்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1563/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இற்றை வரை களணிதிஸ்ஸ இரட்டை மின் வலுநிலையத்தின் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) நட்டம் ஏற்பட்டிருப்பின்,

(i) அதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டத்தை தாங்கிக்கொள்பவர்கள் யாரென்பதையும்;

(iii) இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யாரென்பதையும்,

(iv) மேற்படி நட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள நேரிட்டிருப்பின் அதற்கான நிவாரணம் மக்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 08, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1067/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தக மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் என்னவென்பதையும்;

(ii) அவ்வித வர்த்தக மேம்பாடுகள் எந்த மட்டத்திற்கு வெற்றியளித்துள்ளன என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாடுகளில் தங்கியுள்ள ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஊழியர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தங்கியுள்ள நாடுகள் எவை என்பதையும்;

(iii) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவி நல்கிய பொருட்களின் பெயர்கள் என்ன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) ஏற்றுமதியாளர்கள் வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவிகளை நல்கியதா என்பதையும்;

(ii) ஆமெனில், உதவிகள் வழங்கப்பட்ட கம்பனிகளின் பெயர்களையும் அதனால் 2009, 2010 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1354/ '11

கௌரவ புத்திக்க பத்திரண,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ கிரிக்கட் மைதானத்துக்கு அருகாமையில் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய மக்கள் வதியும், கமத்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஏறத்தாழ 5000 ஏக்கர் காணியை விளையாட்டுத்துறைக் கிராமமொன்றுக்காக அரசு சுவீகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது அதனுடன் தொடர்புடைய நிலஅளவைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இந் நிலப்பரப்பினுள் ஐந்து குளங்களும் இரண்டு அரசாங்க பாடசாலைகளும் உள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் அந்த இரண்டு பாடசாலைகளையும் அப் பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(ii) அவ்வாறெனின், அந்த பாடசாலைகள் மீண்டும் எங்கு நிறுவப்பட உள்ளன;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக் காணிகள் சுவீகரிக்கப்படுவதன் மூலம் வீடுகள் மற்றும் காணிகளை இழக்கின்ற மக்களுக்கு மீண்டும் வீடுகளும் காணிகளும் வழங்கப்படுமா;

(ii) அவ்வாறெனின் காணிகள் மற்றும் வீடுகள் எந்த பிரதேசத்தில் வழங்கப்படும்;

(iii) இதற்காகப் பயன்படுத்தப்படும் முறைமையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1596/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் சன்மான நிதியத்திற்கு பணம் கிடைக்கும் வழிகள் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்தில் தற்போது காணப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) 2005ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை குறித்த நிதியத்தின் நிதிச் சொத்துக்களின் அளவு வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி நிதியத்திலிருந்து சன்மானம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சன்மானங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது சன்மானம் பெற விண்ணப்பித்துள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1686/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தித் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(எ) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1068/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள விருப்பத்திற்குரிய , இருதரப்பு, பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் எவை என்தை தனித்தனியாகவும்;

(ii) வேறு ஏதாவது நாடுகளுடன் புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றனவா என்பதையும்;

(iii) ஐக்கிய அமெரிக்காவுடன் ரி.ஐ.எப்.ஏ. தொடர்பிலான தற்போதைய நிலைமை என்ன என்பதையும்;

(iv) விருப்பத்திற்குரிய வர்த்தக உடன்படிக்கைகளை கையாளுகின்ற அதிகாரிகளின் பெயர்கள் என்ன என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) ஏன் ஆசிய நாடுகளுடன் வினைத்திறன்மிக்க முறையில் வர்த்தகத்தில் இலங்கை ஈடுபடவில்லை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1355/ '11

கௌரவ புத்திக்க பத்திரன,— பிரதம அமைச்சரும் புத்தசாசன சமயவிவகார அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இராணுவ தரைப் படையின் இயந்திர காலாட் படையணியின் சேவா வனிதா பிரிவினால் இசை நிக்ழச்சியொன்றை நடத்துவதற்காக அந்தப் படைப்பிரிவின் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் 2011 மார்ச் மாத சம்பளத்திலிருந்து ரூபா ஐயாயிரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அப் பணம் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றபோது அந்த மாதத்தில் படைப்பிரிவினால் விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுப் புத்தகங்களுக்காக ஏறத்தாழ ரூபா நாலாயிரம் பணத்தொகை அந்த இசை நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்டிருந்தது என்பதையும்;

(iii) மேற்கூறியவாறு மாதாந்த சம்பளத்திலிருந்து ஒரேதடைவையில் ரூபா ஐயாயிரம் பணத் தொகை அறவிடப்படுவதனால் இராணுவ தரைப் படையினரின் குடும்ப அங்கத்தவர்கள் கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக முறைசார் விசாரணையொன்றை நடத்தி தவறிழைத்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1597/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2600ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ள முத்திரைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றில், தற்போது அச்சிடப்பட்டுள்ள முத்திரைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த முத்திரைகளை வெளியிடுவதற்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அறிமுகம் செய்யப்பட்ட ஒவ்வொரு முத்திரையினதும் படங்களின் பொருள்கோடல் யாதென்பதையும்;

(ii) மேற்படி முத்திரைகளை வடிவமைக்கவென நியமிக்கப்பட்ட குழுவின் அல்லது பதிப்புக் குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இதற்கென அவர்களுக்குள்ள தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1199/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 5 வருடங்களில்,

(i) தேங்காயின் மொத்த நுகர்வு, தலைக்குரிய நுகர்வு எவ்வளவு என்பதையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட தேங்காயின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட தேங்காயின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) தேங்காய் இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மானியம் எவ்வளவு என்பதை உறுதிப்படுத்துவதற்கேற்ற தகுந்த ஆதாரங்களுடனும்

வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட நேரடி, மறைமுக வரிகள் எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1356/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இத்தடவை பெரும்போகத்தின்போது 9264 ஹெக்ரயார்களில் பயிரிடப்பட்ட கௌபி, உளுந்து, பயறு மற்றும் பழங்கள் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக அழிவடைந்துள்ளன என்பதையும்;

(ii) மேற்படி பயிர்களும் விளைச்சலும் அழிவடைந்தமை காரணமாக அப்பிரதேசங் களிலுள்ள விவசாயிகள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் மானியங்களை வழங்குவதற்கான முறைமையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த முறைமையியல் யாதென்பதையும்;

(iii) குறித்த மானிய முறை நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1486/ '11

கௌரவ அஜித் குமார,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவை;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1599/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் முழுப்பெயர் மற்றும் வயது என்ன;

(ii) இவர் இதற்கு முன்னர் சேவையாற்றிய இடம் மற்றும் பதவி எவை;

(iii) இவருடைய தொழில் அனுபவம் எவை;

(iv) இவருடைய தற்போதைய சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் எவை;

(v) இதற்கு முன்னர் வழங்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் எவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போதைய தலைவரை அப்பதவிக்கு நியமித்த அதிகாரி யாரென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1200/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்பிற்காக இலங்கையர்கள் சென்ற நாடுகள் எவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வருடங்களில் அத்தகைய நாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காக சென்ற ஆண்களதும் பெண்களதும் எண்ணிக்கை என்னவென்பதை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாகவும்;

(iii) அவர்களினால் ஈட்டப்பட்ட சராசரி சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iv) அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த சம்பள நிர்ணயம் உள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1357/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியின் தலவாக்கலை பிரதேசத்திலுள்ள வீதி தற்போது கடுமையாக சேதமடைந்தள்ளது என்பதையும்;

(ii) இந்த நிலைமை காரணமாக போக்குவரத்தின்போது அப்பகுதி மக்கள் பாரிய சிரமத்தினை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்;

(iii) கடுமையாக சேதமடைந்துள்ள மேற்படி வீதி பிரதேசத்தின் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கு தடையாக அமைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹட்டன் நுவரெலியா வீதியில் தலவாக்கலை பகுதியை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) தற்போது அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி வீதியில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1600/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சர் உள்ளடங்கிய குழுவினர் 2011.05.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு அண்மியதொரு தினத்தில் மேற்கொண்ட அமெரிக்க விஜயத்தின் நோக்கம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அதில் கலந்துகொண்டவர்களின் பெயர்களும் பதவிகளும் யாவையென்பதையும்;

(ii) இவர்கள் தங்கியிருந்த இடங்களின் பெயர்கள் மற்றும் அதற்காக அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட செலவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விஜயத்தின் பொருட்டு அரசினால் ஏற்கப்பட்ட விமானப் பயண, உள்ளகப் பயண செலவுகளும் ஏனைய செலவுகளும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி விஜயத்தின் மூலம் இலங்கைக்கு கிடைத்த நன்மைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 12, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1305/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் தற்போது இயங்குகின்ற பிரதான 20 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் பெயர்கள் என்னவென்பதையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் மேற்படி நிறுவனங்களினால் வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்ட நபர்களது எண்ணிக்கை எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) அரசாங்கத்தினால் அத்தகைய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கு வழங்கப்பட்ட நன்மைகள் எவை என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1358/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின், பஸ்கொட பிரதேச செயலாளர் பிரிவின், புவக்கஹஹே கிராம உத்தியோகத்தர் பிரிவின் சமுதாய நீர்க் கருத்திட்டம் இற்றைக்கு சில மாதங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட போதிலும் அதன் மூலம் முறையான நீர்விநியோகம் கிடைப்பதில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர்த்திட்டத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) அதற்கான நிதி ஏற்பாடுகளை வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நீர்த்திட்டத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த கேள்விப்பத்திர விலைகள் யாவை;

(iv) சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரம் அளிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் கேள்விப்பத்திர பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நீர்க் கருத்திட்டம் மக்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்படுமா;

(ii) ஆமெனில் அதற்காகக் கழியும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1659/'11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டளவில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் நிரந்தர, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், பதவிகள், உரிய சம்பளங்கள் மற்றும் வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள் யாவை என்பதையும்

அவர் தனித்தனியே குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களில் 2011 ஆம் ஆண்டில் மிகை ஊதியம் செலுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்களும், பதவிகளும் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு ஊழியருக்குமான மிகை ஊதியத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இதற்காக ஏற்கப்பட்ட மொத்த செலவு எவ்வளவு என்பதையும்;

(v) இதற்கான நிதி பெறப்பட்ட வழி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1687/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் பெருந்தோட்டத் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் பெருந்தோட்டத் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1312/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மதஅலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 ஆகிய வருடங்களில்,

(i) பாதுகாப்பு அமைச்சுக்கு உரித்தல்லாத கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகை அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களின் சதுரஅடிக்கான வாடகைப்பெறுமதியையும்;

(iii) இக் கட்டிடங்களுக்கான குத்தகைக்காலத்தையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக மேற்படி வருடங்களில்,

(i) அமைச்சுடன் தொடர்புடைய ஏதாவது அமைப்புகளுக்கு உரித்தல்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்குச் செலவுசெய்த மொத்தப் பணத்தையும்;

(ii) சொந்தமாக உள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iii) ஏனைய வெளிவள சேவைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்கூறப்பட்ட வெளிவள சேவைகளுக்கு ஏற்பட்ட செலவினத்தையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்;

(vi) பணியாட்களின் மொத்த எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1359/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் கட்டான பிரதேச சபைக்குரிய வேத்தேவ சேதனப் பசளை உற்பத்திக்கூடம் மக்கள் செறிவுமிக்க வீதியொன்றின் அருகில் அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக பகுதிவாழ் மக்களின் சுகாதாரத்திற்கு தீவிர அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் நிலைமையைக் கருத்திற் கொண்டு மேற்படி சேதனப் பசளை உற்பத்திக்கூடத்தை மக்கள் இல்லாத பிரதேசமொன்றில் நிறுவ நடவடிக்கை எடுப்பாரா;

(ii) இதற்காக ஏற்கனவே திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில் அதனை மீள்நிறுவ உத்தேசித்துள்ள இடம் யாது;

(iv) அவ்விடத்தில் பசளை உற்பத்திக் கூடத்தை நிறுவ எடுக்கும் காலம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1660/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சனாதிபதிக்கென பிரத்தியேக மருத்துவர் ஒருவர் உள்ளாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவரின் பெயர் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) அவரின் சம்பளம் அல்லது வேதனம் மற்றும் விசேடமான அல்லது வேறு கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவர் சனாதிபதியுடன் வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்றுள்ளாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், விஜயங்களை மேற்கொண்டிருந்த குறித்த நாடுகள் மற்றும் கால எல்லைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விஜயங்களின்போது, மேற்படி மருத்துவருக்காக அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட செலவினம் ஒவ்வொரு விஜயத்துக்கும் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 13, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0594/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த எட்டு வருடங்களில்,

(i) மூலதனக் கடன் கொடுப்பனவிற்காகவும் அரசாங்க ஊழியர்களக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டிக்காகவும் செலவு செய்யப்பட்ட தொகையையும்,

(ii) அரசாங்க சேவையில் ஏற்பட்ட ரூபா 25 மில்லியனுக்கு மேற்பட்ட வேறு ஏதேனும் மீண்டும் வரும் செலவினத்தின் பெயரையும் தொகையையும்

வருடவாரியாக அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1364/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய மடல – தம்முல்ல – கரதின பிரதான வீதி சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கை உரிய தரத்திற்கமைவாக இடம்பெறவில்லையென மக்கள் குற்றம் சுமத்துகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் மூன்று கிலோமீற்றர் தூரத்தை அபிவிருத்தி செய்வதற்கு செலவாகியுள்ள மொத்த பணத்தொகை யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் ஏற்புடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்;

(iv) கேள்விப்பத்திரம் அளிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப்பத்திர விலை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1497/ '11

கௌரவ அஜித் குமார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போக்குவரத்து அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1795/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடருக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த கிரிக்கட் வீரர் உபுல் தரங்கவிற்கு மருத்துவ உதவிகளை வழங்கிய மருத்துவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) அம்மருத்துவர் அல்லது மருத்துவர்கள் மருத்துவராக பதிவு செய்யப்பட்ட ஆண்டுகளும் இவர்களின் தொழில்சார் அனுபவங்களும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வீரர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பயன்படுத்தியுள்ளதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின் பெறுபேறுகளுக்கமைய இவர் பெற்றுக்கொண்டுள்ளதாக கூறப்படும் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து வகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தியமை தொடர்பாக கிரிக்கட் வீரர் உபுல் தரங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிலிருந்து இவரை விடுவிப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0595/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 1995 — 2000 காலப்பகுதியில் வருடாந்த அடிப்படையிலான,

(i) நாட்டின் மொத்த வேலைப்படை என்ன என்பதையும்,

(ii) தனியார் துறை மற்றும் அரசதுறை வேலைப்படை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iii) அரச துறையில் முப்படைகள், பொலிஸ்துணைச் சேவை ஆகியவற்றின் மொத்தத் தொழில்படை மற்றும் அல்லாத ஏனைய அரச சேவையினரின் மொத்த எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iv) பொதுத் துறையின் கீழ் வரும் மேலே குறிப்பிடப்பட்ட அனைவரும் ஓய்வூதியத்துக்குரித்துடையவர்களா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 15 ஆண்டுகளில், அரசதுறையில் ஏதேனும் உறுதிப்படுத்தப்படாத, தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவர்களின் பெயர்கள், நியமனங்கள் என்ன வென்பதையும்,

(iii) அந்நியமனங்கள் அரசாங்கத்தின் சம்பளச் செலவினத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை வருட வாரியாகவும்,

(iv) அவை எப்போது உறுதி செய்யப்படும் என்பதையும்,

(v) அவை எதிர்காலத்தில் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், இந் நோக்கத்திற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் எப்போது மேற்கொண்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1365/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் வருடத்திற்கான பாடசாலை இலவச சீருடைகள் இற்றைவரை வழங்கப்படாத அரச பாடசாலைகள் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சீருடை வழங்குதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலை சீருடை வழங்கப்படுமாயின், அது எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சில அரச பாடசாலைகளில் சீருடைக்கென வழங்கப்பட்டுள்ள புடவை உரிய தரத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லையென பெற்றோர்கள் குற்றம்சாட்டுவதால், இவ்விடயம் தொடர்பாக உரிய விசாரணைகளை நடாத்தி மேற்படி பாடசாலைகளுக்கு மீண்டும் சீருடைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பாடசாலை சீருடைகளை வழங்குவதற்கு வழங்குனர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரதாரர்கள் வெள்ளை காற்சட்டை, வெள்ளை மேற்சட்டை , வெள்ளை மகளிர் மேற்சட்டை மற்றும் காவி உடை ஒரு மீற்றருக்கு வழங்கியிருந்த விலைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1796/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குத்துச்சண்டை வீரர் மஞ்சு வன்னியாரச்சிக்கு மருத்துவ உதவிகளை வழங்கிய மருத்துவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) அம்மருத்துவர் அல்லது மருத்துவர்கள் மருத்துவராக பதிவு செய்யப்பட்ட ஆண்டுகள் மற்றும் இவர்களின் தொழில்சார் அனுபவங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக குத்துச்சண்டை வீரர் மஞ்சு வன்னியாரச்சி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் பெறுபேறுகளுக்கமைய இவர் பெற்றுக்கொண்டுள்ளதாக கூறப்படும் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து வகை யாதென்பதையும்;

(ii) இவருக்கு எதிராக தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிலிருந்து இவரை விடுவிப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 14, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0596/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த 10 வருடங்களுக்கான,

(i) அரசாங்கத்தின் மொத்த உண்மையான செலவினையும் (நிகர பொருளாதாரப் புரள்வு);

(ii) நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலமாக ஈட்டபட்ட அரசாங்கத்தின் வருமானத்தினை வெவ்வேறாகவும்;

(iii) அரசாங்கத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினையும்;

(iv) நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினையும்;

(v) அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையையும்

வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய எங்கிருந்து நிதி பெறப்பட்டது என்பதையும் அதற்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டிக் கிரயத்தையும்;

(ii) இந்த வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுக்க முடியுமா என்பதையும், நாடு கடன் பொறியினை நோக்கிச் செல்கின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1370/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் வெலிகம, கப்பரதொட்ட, "தர்ஷன" வில் வதியும் திரு. எஸ்.ரீ.கே. ஜயவீர உள்ளிட்ட சகோதரர்களுக்கு சொந்தமான வெலிகம, கப்பரதொட்டை புதிய காலி வீதியில் 153/1 இலக்கமுடைய தனிகஹவத்த எனும் காணியில் சுமார் 18.235 பர்சஸ் காணித்துண்டொன்று வெலிகம நகர சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிப்பு இடம்பெற்று அண்ணளவாக ஒரு வருடகாலம் கடந்திருந்தாலும் இற்றைவரை நட்டஈடு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலமாக சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிக்கு மேலதிகமாக திரு. உஸ்.ரீ.கே. ஜயவீர உள்ளிட்ட சகோதரர்களுக்கு சொந்தமான அண்மித்துள்ள காணிகளையும் உள்ளடக்குகின்ற வகையில் வெலிகம நகர சபையினால் தற்போது கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுவீகரிக்கப்பட்ட காணிக்கு இற்றவைரை நட்டஈடு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) நட்டஈடு செலுத்தப்படுமாயின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்;

(iii) நட்டஈடாக எவ்வளவு பணம் செலுத்தப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களை அமைப்பதற்காகப் பயன்படுத்திய காணிக்கும் நட்டஈடு பெற்றுகொடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், இந் நட்ட ஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1483/ '11

கௌரவ அஜித் குமார,— சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1618/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 மே மாதம் முதல் இன்றுவரை நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சர்/பிரதி அமைச்சர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தினதும் நோக்கம் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் யாவை;

(iv) ஒவ்வொரு விஜயத்தின்போதிலும் பங்கேற்ற உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிரத்தியேக பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் யாவர்;

(v) மேற்படி பங்கேற்றவர்கள் ஒவ்வொரு விஜயத்தின்போது பிரயாணம் செய்த விமான வகுப்பு மற்றும் அதற்காக செலவழித்த பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி விஜயங்களுக்காக செலவழிக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0598/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அடுத்த 8 வருடங்களில் எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியினையும்,

(ii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா வருமானத்தை வருடவாரியாகவும்,

(iii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா கடன் சுமையை வருடவாரியாகவும்

(iv) 01.01.1994, 01.01.2005, 01.08.2010 ஆகிய திகதிகளில் உள்ளவாறு, தலா ஈட்டல்களினதும் கடனினதும் பெறுமதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1394/ '11

கௌரவ புத்திக்க பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் அக்குரெஸ்ஸ கல்வி வலயத்திற்குரிய ஹிக்கொட ஸ்ரீ சுமன கனிஷ்ட வித்தியாலயம் இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்பிருந்து மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது அதன் கட்டிடங்கள் சிதைவடைந்து பாடசாலை வளாகம் காடடர்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலையை மீண்டும் திறந்து பிரதேசத்தின் பிள்ளைகளுக்குக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், பாடசாலை வளாகத்தையும் கட்டிடங்களையும் வேறு பொருளாதார நடவடிக்கைக்காகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அப்பொருளாதார நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1797/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இத்தாலியில் தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களது சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதி கழிக்கப்படுதல், வரி அறவிடுதல் உள்ளிட்ட ஏனைய அறவீடுகள் அந்நாட்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அறவிடப்பட்ட முழுத் தொகை அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு தொகை இற்றைவரையில் எமது நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், இலங்கை ஊழியர்கள் சேவையிலிருந்து நீங்கி, நாடு திரும்புகையில் அந்நாட்டு அரசாங்கம் அவர்களுக்கு ஏதேனும் பணத்தொகையை வழங்குகின்றதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நீண்ட காலமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபடுவதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?